# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2193/7 - 2020 සැප්තැම්බර් මස 14 වැනි සඳුදා - 2020.09.14**

2193/7 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1 ஆம் திருத்தம்**

அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2053/18 ஆம் இலக்கமுடைய 2018 சனவரி மாதம் 09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரச சுகாதார முகாமைத்துவ சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

வைத்தியர் **எஸ். எச். முணசிங்க,**
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
இல. 385, வன. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.
2020, செத்தெம்பர் 11.

1. இல. 08 பிரிவு 8.1 அட்டவணையில் 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் நிரலில் வினைத்திறன் காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துமூல / தொழில்முறை / சான்றிதழ் பாடநெறி / வேறு என்பதன் கீழ் “120 மணித்தியால சான்றிதழ் பாடநெறி” என திருத்துதல்.

2. பின்னிணைப்பு 06 பின்வருமாறு.


1A - G 32890 - 25 (2020/09)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பாடநெறியின் பெயர் - அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 120 மணித்தியால பாடநெறி.

| பாடநெறிக்குரிய பாடங்கள் | காலம் |
|---|---|
| (1) தாபனப் பணிகள் மற்றும் நடைமுறை விதிகள் | 35 மணித்தியாலங்கள் |
| (2) அரச நிதி முகாமைத்துவம் | 35 மணித்தியாலங்கள் |
| (3) நடப்பு விவகாரங்கள் | 25 மணித்தியாலங்கள் |
| (4) சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் | 25 மணித்தியாலங்கள் |

1. பாடநெறி பற்றிய விபரம் (தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று ஐந்து வருடங்களுக்குள் பாடநெறியை பயின்று நிறைவுசெய்தல் வேண்டும்.)

   பாடநெறி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். ஏற்புடைய சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கான பரீட்சைக்குத் தோற்றிய ஊடக மொழியில் அல்லது அரசகரும மொழி யொன்றின் மூலம் உத்தியோகத்தர்கள் பாடநெறியை தொடருதல் வேண்டும். போட்டிப் பரீட்சை இன்றி சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டவர்கள் தொடர்பில் அவர்கள் தான் கல்வி பயின்ற ஊடக மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றின் மூலம் பாடநெறியைத் தொடருதல் வேண்டும்.

2. நடாத்தும் அதிகாரி : சுகாதார அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்படும் ஒரு நிறுவனத்தினால்

3. பாடநெறி நடாத்தப்படும் காலப் பிரிவு : ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

4. பாடநெறிக்கான பாடத்திட்டம்

| பாடநெறிக்குரிய பாடங்கள் | பாடத்திட்டம் |
|---|---|
| (1) தாபனப் பணிகளும் நடைமுறை விதிகளும் | அலுவலக முறைமைகளின் கோட்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலமான தொடர்பாடல், ஆவணங்களைக் கோவைப்படுத்தல்.<br>மாதிரிப் படிவங்களைத் தயாரித்தல் போன்ற துறைகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் பற்றிய அறிவு, அலுவலகச் செயற்பாடுகளின் போது பெற்றுக் கொண்ட அனுபவத் தேர்ச்சி என்பவற்றை பரீட்சிப்பதற்கான பகுதி, அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் நடவடிக்கைமுறை விதிகளின் I ஆம் தொகுதி மற்றும் தாபன விதிக்கோவையின் I ஆம் II ஆம் தொகுதி என்பவற்றில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவு என்பவற்றைப் பரீட்சிக்கும் பகுதி என்பவற்றை இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். |
| (2) அரச நிதி முகாமைத்துவம் | அரசாங்கத் திணைக்களங்களிலும் அமைச்சுக்களிலும் பயன்பாட்டிலுள்ள நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்கள், வருமானங்களும், கொடுப்பனவுகளும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் ஆகிய விடயங்கள் (தொகை மதிப்பீடு, களஞ்சியப்படுத்தல், நிதி ஒழுங்குவிதிகள், கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு, வங்கி தொடர்பான அடிப்படை பரீட்சயம்) தொடர்பான அறிவு மற்றும் புரிந்துணர்வை பரிசீலிப்பது இவ்வினாப்பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | |
|---|---|
| (3) சமகாலப் போக்குகள் | உள்நாட்டு மற்றும் சர்வதேச சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் பகுதியினையும், அலுவலக முகாமைத்துவம் தொடர்பான புதிய போக்குகள், அரச சேவையின் சேவை வழங்கல் தொடர்பான புதிய போக்குகள் மற்றும் நல்லாட்சி தொடர்பிலான அறிவினை பரீட்சித்தலுக்கான பகுதியினையும் இவ் வினாப்பத்திரம் உள்ளடக்கியிருக்கும். |
| (4) சுகாதார நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் | சுகாதார மற்றும் ஆயுர்வேதத் திணைக்களத்தின் நோக்கங்கள், நிரல் அமைச்சின் மற்றும் மாகாண சபைகளின் சுகாதார சேவைகள் கட்டமைப்பு, சுகாதாரத் துறையின் அடிப்படை அம்சங்களும் அது சம்பந்தமான நிறுவனங்களும், நோயாளர்களுக்கான உபசரணைச் சேவையின் கட்டமைப்புசார் வளர்ச்சி, வைத்தியசாலையின் செயற்பாடுகள், சமைக்காத உணவுகளுக்கு கட்டளையிடல், கையேற்றல், சமைத்த உணவுகளின் தரம் பற்றிய பரிசோதனை, மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கல் மற்றும் ஏனைய வழங்கல்கள், மருத்துவ புள்ளிவிபர முகாமைத்துவம், மருத்துவ நிறுவனங்களின் தொடர்பாடல் செயற்பணி மற்றும் பொதுசன தொடர்பு, வைத்தியசாலைக் கட்டணம் மற்றும் தோட்ட உற்பத்தித்திறன், வைத்தியசாலைகளின் விசேட பிரிவுகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட விசேட வியாபாரங்கள் பற்றிய அறிவை அளவிடுவதற்கான வினாத்தாளைக் கொண்டதாகும். |

விண்ணப்பதாரர்கள், பாடத்திட்டம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை பற்றிய முழுமையான விபரங்களை அறிந்து கொள்வதற்கு சுகாதார அமைச்சின் செயலாளரினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

10 - 13

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.